# மறுவரையறை ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண்: 66/2021 நாள்: 24.12.2021

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மற்றும் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் மாநகராட்சிக்கான வார்டு மறுவரையறை குறித்து கும்பகோணம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் 27.12.2021 திங்கட்கிழமை அன்று மாலை 3.00 மணி முதல் 5.00 மணிவரை மறுவரையறை ஆணையத்தின் கருத்துக்கேட்புக் கூட்டம் நடைபெறவுள்ளது. எனவே, இப்பகுதிகளை சார்ந்த, பொது மக்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, தங்களின் ஆட்சேபணைகள், கருத்துக்களை நேரடியாக தெரிவித்துக் கொள்ளலாம். மேலும் அதன் விபரங்களை மனுவாகவும் வழங்கலாம்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு மறுவரையறை ஆணைய தலைவர் முனைவர் வெ.பழனிகுமார் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள், மறுவரையறை ஆணைய உறுப்பினர் - செயலர் திருமதி. எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள், உறுப்பினர் / நகராட்சி நிர்வாக இயக்குநர் திரு. பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் இ.ஆ.ப., அவர்கள், கும்பகோணம் மாநகராட்சி ஆணையர் திரு. எம். செந்தில் முருகன் மற்றும் மறுவரையறை ஆணையத்தின் அலுவலர்கள், அரசு அலுவலர்கள் பங்கேற்க உள்ளனர்.

(மறுவரையறை ஆணைய ஆணைப்படி)

ஒப்பம்/-
மக்கள் தொடர்பு அலுவலர்